# MELUR MUNICIPALITY
## Minutes of the Council Meeting held on 07.06.2018 (Ordinary)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 271 | **பொருள் எண்.1**<br><br>இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் நகராட்சி ஒருங்கிணைந்த குப்பை கூடத்தில் மின் இணைப்பு பெறுதல், குப்பைகளை தரம் பிரிக்கும் பணி, மண்புழு உரம் தயார் செய்யும் கூடம் போன்ற பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. நவீன கணினி எடை மேடை பழுதான கணினி மற்றும் மதர்போர்டு /சாப்ட்வேர் பழுதுப்பணி பார்க்க வேண்டி இருப்பதால் உள்ளூர் விலைப்புள்ளி கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>1. Raj systems, 192, Sivagangai road, Melur — Rs.7880/-<br>2. Divine Systems, 2, Kathapattu chettiyar street, Melur — Rs.8490/-<br>3. Sakthi Computers, 161/4 Nagai Kadai Bazaar, Alagar Kovil road, Melur — Rs.7021/-<br><br>அலுவலகக்குறிப்பு<br><br>அ) மேற்கண்ட விலைப்புள்ளியில் மிகக்குறைந்த விலைப்புள்ளி கொடுத்த மேலூர் சக்தி கம்யூட்டர்ஸ் நிறுவனத்தின் மூலம் பணிகளை மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) மேற்கண்ட பணிகளுக்கு ஆகும் செலவினத்தை இந்நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

Nested quotation table:

| | | |
|---|---|---|
| 1. | Raj systems<br>192, Sivagangai road<br>Melur | Rs.7880/- |
| 2. | Divine Systems<br>2, Kathapattu chettiyar street<br>Melur | Rs.8490/- |
| 3. | Sakthi Computers<br>161/4 Nagai Kadai Bazaar<br>Alagar Kovil road<br>Melur | Rs.7021/- |

| | | |
|---|---|---|
| 272 | **பொருள் எண்.2**<br><br>திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 9 வார்டு பகுதிகளில் தனியார் நிறுவனம் மூலம் துப்புரவு பணி மேற்கொள்ள 18.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 31.03.2018 அன்று தி நியு இன்டியன் எக்ஸ்பிரஸ் மற்றும் மாலை முரசு நாளிதழில் வெளியிட்டதற்கான விளம்பரக்கட்டணம் ரூ.69300/—ஐ அக்கார்டு அட்வர்டைசிங் ஏஜென்சி, சென்னை நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 273 | **பொருள் எண்.3**<br><br>திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தள்ளுவண்டிகள் மற்றும் மூன்று சக்கர வண்டிகள் வாயிலாக சேகரிக்கப்படும் குப்பைகளை கொட்டி எடுத்துச் செல்லப்பயன்படுத்தப்பட்டு வரும் டம்பர் பின்களில் இன்னும் 5 எண்ணிக்கை பெரிய பின்களும், 15 எண்ணிக்கை சிறிய பின்களும் பழுதடைந்தள்ளதை அரசு சார்ந்த கூட்டுறவு நிறுவனமான மேலூர் அக்ரோ நிறுவனம் மூலம் பழுது நீக்கம் செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 274 | **பொருள் எண்.4**<br><br>1998ஆம் வருடத்திய திருத்தப்பட்ட தமிழ்நாடு தொழில்வரி சட்டம் 59/98 நாள்.28.12.1998ல் வெளியிடப்பட்டதின்பேரில் அரசு ஆணை எண்.11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.12.01.1999ல் அறிவிக்கப்பட்ட உத்திரவின்படி உள்ளாட்சி அமைப்புகளில் 01.10.1998 முதல் புதிய தொழில்வரி நிர்ணயம் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் ஒவ்வொரு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தொழில்வரி சீராய்வு (திருத்தம்) கட்டாயமாக நடைமுறைப் படுத்தப்படவேண்டும் என மேற்கண்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடியால், நகர் மன்றத் தீர்மான எண்.88 நாள். 30.10.2013 ன்படி 01.10.2013 முதல் அமுல்படுத்தப்பட்ட தொழில்வரி தற்போது | அனுமதிக்கப்பட்டது |

நடைமுறையில் உள்ளதை மேலூர் நகராட்சியின் எல்லைக்குள் உள்ள வங்கிகள் மற்றும் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் மத்திய மாநில அரசு அலுவலகங்களில் பணியாற்றும் அலுவலர்கள், நகராட்சி எல்லைக்குள் தொழில் செய்யும் வணிகர்கள், வர்த்தக நிறுவனங்கள், தனியார் மருத்துவமனைகள், மருத்துவர்கள், அரசு போக்குவரத்துக் கழகங்கள், மின்வாரிய அலுவலங்களில் பணிபுரியும் பணியாளர்கள், மற்றும் தனியார் கம்பெனியில் பணிபுரியும் பணியாளர்கள் அனைவருக்கும் வரும் 01.10.2018 முதல் கீழ்க்கண்டுள்ளாறு தொழில்வரியினை உயர்வு செய்யலாம்.

| வ. எண் | சராசரி அரையாண்டு வருமான விகிதம் | 01.10.2013 முதல் அமுலில் உள்ள அரையாண்டு தொழில்வரி விபரம் | 01.10.2018 முதல் உயர்வு செய்ய உள்ள அரையாண்டு தொழில்வரி விபரம் |
|---|---|---|---|
| 1. | ரூ.21,000/– வரை | இல்லை | இல்லை |
| 2. | ரூ.21,001 முதல் 30,000வரை | ரூ.132/– | ரூ.165/– |
| 3. | ரூ.30,001 முதல் 45,000வரை | ரூ.329/– | ரூ.411/– |
| 4. | ரூ.45,001 முதல் 60,000 வரை | ரூ.659/– | ரூ.824/– |
| 5. | ரூ.60,001 மேல் | ரூ.1250/– | ரூ.1250/– |

அரசு உத்திரவில் தொழில்வரி திருத்தம் செய்யும்போது குறைந்த பட்சம் 25 விழுக்காடு முதல் அதிகபட்சம் 35 விழுக்காடு நிர்ணயம் செய்யப்படவேண்டும் என்றும் ஐந்தாண்டுக்கு ஒருமுறை தொழில்வரி உயர்த்த வேண்டும் எனவும், ஏற்கனவே உள்ள தொழில்வரி தொகையில் அரசாணையின்படி 25% முதல் 35% வரை உயர்வு செய்யவும், ஓர் ஆண்டுக்கான தொழில்வரி ரூ.2500/–க்கு மிகாமலும் உயர்வு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. மேலூர் நகராட்சியில் 2018ஆம் ஆண்டு அக்டோபர் முதல் (2018–2019 இரண்டாம் அரையாண்டு முதல்) தொழில்வரியை 25% உயர்த்தி நிர்ணயம் செய்யவும் பொதுமக்கள்அறிய விளம்பரப்படுத்தவும் ஏற்படும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

நகராட்சியின் நிதிநிலைமையை கருத்தில் கொண்டு 25% உயர்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2199/2008/அ1)

| | | |
|---|---|---|
| 275 | **பொருள் எண்.5**<br><br>இந்நகராட்சி பேருந்து நிலையம் எதிரே மாவட்ட ஆட்சியர் தலைமையில் 05.05.2018 அன்று மாவட்ட வேலை வாய்ப்பு முகாம் நடைபெறுவதை முன்னிட்டு அன்றைய தினம் குடி நீர் மற்றும் பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது. அதனை முன்னிட்டு கீழ் கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.<br><br>1) பி.வி.சி. டேங்க் — 7 எண்ணம் — ரூ 24500<br>2) பிளம்பிங் ஒர்க் — 7 எண்ணம் — ரூ 3500<br>3) ஸ்டாண்ட் — 7 எண்ணம் — ரூ 21000<br>4) பெயர் படம் — 7 எண்ணம் — ரூ 3500<br>5) தொழிலாளர் நல நிதி — ரூ 500<br><br>மொத்தம் ரூ 53000/– க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்கண்ட பணியை நகராட்சி சட்ட விதி 15ன் கீழ் செய்து முடிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்கண்ட பணியை திரு, எஸ். முத்துவேல் ஒப்பந்தகாரர் மூலம் செய்து முடிக்கலாம்.<br><br>ந.க.எண்.1060/2018/இ1 | அனுமதிக்கப்பட்டது |
| 276 | **பொருள் எண்.6**<br><br>இந்நகராட்சி அலுவலக கட்டிடத்தில் அமைந்துள்ள ஆணையர் மற்றும் பொறியாளர் அறைகளுக்கு குளிர்சாதனப்பெட்டி அமைத்தல், தளவாடச்சாமான்கள் அமைத்தல் மற்றும் அறைகளில் தடுப்பு அமைத்தல் ஆகிய பணிகளுக்கு ரூ.9.00இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டிற்கும் பணிமேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1005/இ1/2018 | |
| 277 | **பொருள் எண்.7**<br><br>இந்நகராட்சி அலுவலகத்தைச் சுற்றி அமைந்துள்ள சுற்றுச்சுவர் மிகவும் பழுதடைந்து பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. அதனை இடித்துவிட்டு புதிய சுற்றுச்சுவர் அமைக்க ரூ.9.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டிற்கும், பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1006/இ1/2018 | அனுமதிக்கப்பட்டது |
| 278 | **பொருள் எண்.8**<br><br>இந்நகராட்சியில் மொத்தம் 24 உயர்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் நகர மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட நீர்த்தேக்கத் தொட்டிகளை இயக்கி குடிநீர் விநியோகம் செய்ய போதிய பிட்டர், டேர்ன் கார்க், வால்வு ஆப்பரேட்டர் மற்றும் காவலர் பணியிடங்கள் காலியாக உள்ளன. எனவே கடந்த 09.08.2016 முதல் தனியார் மூலம் மேற்கண்ட பணிகள் வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிகாலம் 31.05.2018 உடன் முடிவடைகிறது.<br>எனவே தொடர்ந்து அத்தியாவசிய பணியான குடிநீர் விநியோக பணிகளை மேற்கொள்ள Turn cock பணியாளர்கள் 4 நபர்கள், மற்றும் Majdoor பணியாளர்கள் 3 நபர்கள் மூலம் பணியை 01.07.2018 முதல் 30.06.2019 வரை ஓர் ஆண்டிற்கு தனியார் மூலம் மேற்கொள்ள ரூ.9.70 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>அதன்படி தனியார் மூலம் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு<br>குடிநீர் விநியோகப் பணி அத்தியாவசிய பணியாக உள்ளதால் பொதுமக்களின் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம். | |
| 279 | **பொருள் எண்.9**<br><br>இந்நகராட்சி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய துப்புரவு பணியாளர்கள் திருமதி.அழகம்மாள், திருமதி.மாரியம்மாள் தொழிலாளர் நீதிமன்றம், மதுரை வழக்கு எண்.C.P.146/2013, C.P.No.147/2013 ஆகிய இரண்டு வழக்குகளை மறுதிறப்பு செய்ததற்கான கட்டணம் ரூ.8400/– மற்றும் ஒப்பந்த துப்புரவு பணியாளர்கள் வழக்கு I.D.No.4567/2014 சம்பந்தமாக தொழிலாளர் நீதிமன்றம் காரைக்குடிக்கு 15 வாய்தாவிற்கு சென்றதற்கான போக்குவரத்து செலவினம் ரூ.9750/– வழக்கறிஞர் திரு.ஜி.முருகன் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.6593/2013/எச்1 | அனுமதிக்கப்பட்டது |
| 280 | **பொருள் எண்.10**<br><br>மேலூர் நகராட்சியில் 2018–19ஆம் ஆண்டிற்கு எழுதும் பொருட்கள் மற்றும் A4 பேப்பர், A3 பேப்பர், ரேப்பர் சீட், பைல்பேடு, படிவங்கள் , நோட்டுகள் திருச்சி மல்டி பர்பஸ் நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.38/2012/டி2 | அனுமதிக்கப்பட்டது |

MELUR MUNICIPALITY
Minutes of the Council Meeting held on 29.06.2018 (Ordinary)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| 281 | **பொருள் எண்.1**<br><br>இந்நகராட்சியின் சேவை மையத்தில் உள்ள பிரிண்டர் பழுதடைந்து இரண்டு தினங்களாக ரசீதுகள் போட முடியாத நிலை இருந்த காரணத்தினால் பொதுமக்கள் தினமும், சான்றிதழ்கள் பெற பணம் கட்ட முடியாத நிலை ஏற்பட்டதால், அலுவலகப் பணியின் அவசியம் கருதியும், பொதுமக்களின் தேவையினை கருதியும் உள்ளூர் கம்ப்யூட்டர் நிறுவனத்தின் மூலம் மேற்கண்ட பழுதுகளை நீக்கம் செய்ததற்கும், அதற்கான செலவினம் ரூ.4000/—ஐ சக்தி கம்ப்யூட்டர்ஸ் , மேலூர் நிறுவனத்திற்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(கோப்பு எண்.1298/2018/சி1) | அனுமதிக்கப்பட்டது |
| 282 | **பொருள் எண்.2**<br><br>இந்நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள ‘‘ஸ்வஸ்திக் டிரேடர்ஸ்’’ நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட உத்திரவு 31.05.2018 உடன் முடிவடைகிறது. மேலும் எதிர்வரும் 29.05.2018 அன்று மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஏல நடவடிக்கைகள் முடிவடைய காலம் தாமதம் ஆகும் என்பதால் 01.06.2018 முதல் 30.06.2018 வரையிலான ஒரு மாத காலத்திற்கு மேற்கண்ட ‘‘ஸ்வஸ்திக் டிரேடர்ஸ்’’ நிறுவனத்தின் மூலம் தொடர்ந்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br><br>அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 283 | **பொருள் எண்.3**<br><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள குடிநீர் விநியோக மின்மோட்டார்களில் பழுதடைந்துள்ள Panal Board ஐ புதிதாக வாங்கி பொருத்துவதற்கு உள்ளூர் நிறுவனங்களிடம் விலை விகிதம் பெற்று அதன் மூலம் குறைந்த விலை விகிதம் வழங்கிய நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும் குறைந்த விலைவிகிதம் வழங்கிய நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியமைக்கும் அதன் மூலம் பணியை முடித்தமைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியை தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியை முடிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 284 | **பொருள் எண்.4**<br><br>தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திருத்திய கணக்கெடுப்பின்படி 1011 குடும்பங்களில் தனிநபர் கழிப்பறை இல்லாமல் உள்ளது. அவற்றில் கழிப்பறை கட்ட இடவசதி உள்ளது 823 குடும்பங்கள், இடவசதி இல்லாதவை 188 குடும்பங்கள் ஆகும். அனைத்து குடும்பங்களுக்கும் தனிநபர் கழிப்பறை கட்டப்பட வேண்டும். தற்போது தனிநபர் கழிப்பறை அமைப்பதற்கான பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, பணி உத்திரவுகள் வழங்கப்பட்டு வருகிறது. மாநில, மத்திய அரசுகளின் பங்குத்தொகைகள் இன்னும் வரப்பெறவில்லை. தனிநபர் கழிப்பறைகள் கட்டுவதை விரைந்து முடிக்க ஏதுவாக கட்டிடம் கட்டுமான முன்னேற்ற நிலைக்கேற்ப பங்குத்தொகைகள் விடுவிக்கப்பட வேண்டும். எனவே முன்னிட்டு நகராட்சி பொது நிதியிலிருந்து பங்குத்தொகையினை வழங்க ஏதுவாக 1011 x ரூ.8000 = ரூ.8088000/– செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.<br>அலுவலகக்குறிப்பு<br><br>மேற்கண்ட இலக்கான 1011 பயனாளிகளுக்கு நகராட்சி பங்குத்தொகை நீங்கலாக மத்திய, மாநில அரசுகளின் பங்குத்தொகை வரப்பெற்றவுடன் பொதுநிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகையினை ஈடுசெய்து கொள்ளலாம். எனவே மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 285 | **பொருள் எண்.5**<br>இந்நகராட்சியில் உள்ள UPS நீண்ட நாட்களாக பழுதடைந்து உள்ளதால், அடிக்கடி ஏற்படும் மின்தடையால் கணினி போன்ற மின்சாதனங்கள் பழுதடைந்து போய்விடுகின்றன. இதனால் | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>அலுவலகப்பணி மிகவும் தொய்வு நிலை ஏற்படுவதால் மேற்படி UPSனை பழுதுநீக்கம் செய்யவும், புதிய பேட்டரிகள் 12V 100AH -12 எண்ணம், 12V (60AH) 60PPT- 10 எண்ணம் வாங்கவும், அதற்கான செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அ) மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் ரூ.3.00இலட்சத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) அலுவலகப் பணியின் அவசியம் கருதி மேற்கண்ட பணிகளை விலைப்புள்ளி கோரி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.342/2018/சி1</td><td></td></tr>
<tr><td>286</td><td>பொருள் எண்.6<br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பணிபுரியும் 47 துப்புரவு பணியாளர்களுக்கு ஏப்ரல் 2018 முதல் மார்ச் 2019 வரை 12 மாதங்களுக்கு நபர் ஒருவருக்கு ஒரு சோப்பு வீதம் அரசு அங்கீகாரம் பெற்ற சர்வோதயா நிறுவனத்திடமிருந்து வாங்கி வழங்குவதற்கான உத்தேச செலவினம் ரூ.25000க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண்.2554/2014/எச்1</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>287</td><td>பொருள் எண்.7<br>இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்க்காணும் அலுவலகப் பணியாளர்கள் புதிய இருசக்கர மோட்டார் வாகனம் வாங்க வாகன முன் பணம் வழங்க கோரி உரிய நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெற்று விண்ணப்பம் வழங்கியுள்ளார்கள் .மேற்கண்ட பணியாளர்கள் விண்ணப்பம் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது .<br><table><tr><td>வ . எண்.</td><td>பெயர்</td><td>பதவி</td><td>விலைப்புள்ளி தொகை ரூ.</td><td>அனுமதிக்கப்படும் முன் பணத்தொகை ரூ.</td></tr><tr><td>1</td><td>கே.முத்துகிருஷ்ணன்</td><td>துப்புரவு பணியாளர்</td><td>66200</td><td>50000</td></tr><tr><td>2</td><td>எம்.மச்சக்காளை</td><td>துப்புரவு பணியாளர்</td><td>61659</td><td>50000</td></tr></table></td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | எஸ்.மாரியப்பன் | துப்புரவு பணியாளர் | 66200 | 50000 |

**அலுவலக குறிப்பு**

அரசு ஆணை எண் ,719.நிதித்துறை நாள் 13.10.1993.மற்றும் 485 நிதித்துறை நாள் 467 ,13.01.2005.நிதி) சம்பளம் (துறை நாள்22.09.2009.ன்படி மேற்கண்ட பணியாளர்கள் புதிய இருசக்கர மோட்டார் வாகனம் வாங்க முன் பணம் பெற தகுதியுடையவராகிறார்கள் .எனவே புதிய இருசக்கர மோட்டார் வாகனம் வாங்க முன்பணம் ரூ 50,000.வீதம் வழங்க அனுமதிக்கலாம்

288

## பொருள் எண்.8

இந்நகராட்சிக்கு சொந்தமாக புதிய அலுவலக கட்டிடம் கட்டி பயன்பாட்டில் உள்ளது. தற்பொழுது அடிக்கடி மின்தடை ஏற்படுவதால் அலுவலக பணிகள் பாதிப்படைகிறது. எனவே, புதிதாக 25 KVA திறன்கொண்ட ஜெனரேட்டர் வாங்கவும், அதற்குரிய மேடை அமைத்து நிர்மானிக்கவும் ரூ.9.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டள்ளது. மேற்கண்ட மதிப்பீடு மற்றும் பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது

289

## பொருள் எண்.9

இந்நகராட்சியில் உள்ள UPS யினை பழுதுநீக்கம் செய்யவும், புதிய பேட்டரிகள் விநியோகம் செய்யவும் கீழ்க்கண்ட விபரப்படி விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | Powerline Systems and Services<br>70, Kaliyamman kovil main street<br>Pasumpon Nagar<br>Palanganatham,<br>Madurai-625003 | 12V 60PPT<br>12V 100AH | ரூ.11200<br>ரூ.14300 |
| 2. | Ideal Systems<br>93/2 Arul Nagar Kalyana sundaram street<br>Bye pass road,<br>Madurai-625010 | 12V 60PPT<br>12V 100AH | ரூ.12000<br>ரூ.15000 |

அனுமதிக்கப்பட்டது

<table>
<tr><td></td><td>
<table>
<tr><td>3.</td><td>Sun Power Control<br>6/21, Venkatraman Street<br>Chinnachokkikulam<br>Madurai-625002</td><td>12V 60PPT<br>12V 100AH</td><td>ரூ.12500<br>ரூ.15250</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br>
அ)மேற்கண்ட விலைப்புள்ளியில் மிகக்குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மதுரை Powerline systems and services நிறுவனத்தின் மூலம் பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ஆ) அலுவலகப் பணியின் அவசியம் கருதி மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி பணிகளை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td><td></td></tr>
<tr><td>290</td><td>
பொருள் எண்.10<br>
இந்நகராட்சி வார்டு எண்.16க்குட்பட்ட சுந்தரி டவர் பின்புறம் மழைநீர் வடிகால் இல்லாமல் மழைநீர் தேங்கி சுகாதாரக் கேடாக உள்ளது. எனவே மேற்கண்ட தெருவில் ரூ.2.00 இலட்சம் செலவில் புதிதாக மழைநீர் வடிகால் அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
அனுமதிக்கலாம்.
</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>291</td><td>
பொருள் எண்.11<br>
அரசாணை எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007ல் 9 ஆண்டுகள் நிறைவுற்ற கடைகளுக்கு குத்தகை வாடகை மறு மதிப்பீடு செய்யப்பட வேண்டும் எனவும், தற்போதைய குத்தகைதாரருக்கு அப்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையிலான திருத்தி அமைக்கப்பட்ட குத்தகை வீதத்தில் மேற்கொண்டு 9 ஆண்டுகளுக்கு குத்தகை கால அளவில் நீட்டித்துக் கொள்ள முன்னுரிமை அளிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.15316/2016/ஆர்3 நாள்.30.11.2016 ல் 9 ஆண்டுகள் நிறைவுற்ற கடைகளுக்கு நிதிஇழப்பீடு ஏதும் ஏற்படாவண்ணம் வாடகையினை மறுநிர்ணயம் செய்ய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களை தலைவராக கொண்ட கண்காணிப்பு குழு அமைக்க அறிவுறுத்தப்பட்டது.
</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

அதன்பேரில் இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட பட்டியலில் கண்ட கடைகளுக்கு வாடகை மறுநிர்ணயம் செய்ய மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் தலைமையில் 11 பேர் கொண்ட கண்காணிப்பு குழு உறுப்பினர்களை கொண்டு 13.06.2018 ஆம் நாளன்று நடைபெற்ற கண்காணிப்பு குழு கூட்டமர்வில் மேலூர் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட கடைகளுக்கு கீழ்க்கண்ட விபரப்படி வாடகை மறு நிர்ணயம் செய்ய அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து கீழ்க்கண்ட விபரப்படி வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | வரிவிதிப்பு எண். | கடை எண். | குத்தகைதாரர் பெயர் | குத்தகை காலம் 9 ஆண்டுகள் முடிவுற்ற நாள் | ஏற்கனவே செலுத்தப் பட்டு வரும் மாத வாடகை தொகை (ரூ) | கண்காணிப்பு குழுவால் மறுநிர்ணயம் செய்யப்பட்ட வாடகை தொகை (ரூ,) |
|---|---|---|---|---|---|---|
| | | **ஐ.டி.எஸ்.எம்.டி. வாரச்சந்தை கடைகள்** | | | | |
| 1 | 201201 | 1 | கே.எம்.ஜபார் | 31.01.2018 | 1265 | **2500** |
| 2 | 2007067 | 13 | தாவூது ராவுத்தர் | 28.02.2018 | 628 | **2500** |
| 3 | 2007068 | 14 | எம்.போஸ் | 28.02.2018 | 628 | **2500** |
| 4 | 2007069 | 15 | பி.நாகூர் | 28.02.2018 | 635 | **2500** |
| 5 | 2007059 | 16 | சிவகுருநாதன் | 28.02.2017 | 728 | **2500** |
| 6 | 2007047 | 17 | எஸ்.கமலவேணி | 30.09.2016 | 661 | **2500** |
| **7** | **2007061** | **18,19,20** | **எஸ்.பீர்** | **28.02.2017** | **2083** | **7500** |
| 8 | 2007060 | 21 | பி.சுரேஷ் | 28.02.2017 | 728 | **2500** |
| 9 | 2007070 | 22 | எம்.ராஜாமுகமது | 28.02.2018 | 643 | **2500** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10 | 2007071 | 23 | எம்.ராஜாமுகமது | 28.02.2018 | 650 | **2500** |
| 11 | 2007072 | 24 | அஜ்மீர்அலி | 28.02.2018 | 650 | **2500** |
| | | **பேருந்து நிலைய கடைகள்** | | | | |
| 12 | 2007063 | 5 | எம்.சக்திபிரகாஷ் | 31.03.2017 | 760 | **2100** |
| 13 | 2007064 | 6 | ஆர்.வீரமணி | 31.03.2017 | 760 | **2100** |
| | | **தினசரி சந்தை கடைகள்** | | | | |
| 14 | 6117 | 18 | பி.இளையராஜா | 31.03.2016 | 557 | **2000** |

**அலுவலகக்குறிப்பு**

கண்காணிப்பு குழுவால் மறுநிர்ணயம் செய்யப்பட்ட கடை வாடகையினை வசூல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2028/2016/அ2)

292

## பொருள் எண்.12

மேலூர் நகராட்சியில் **2016–17**ம் ஆண்டு வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் வடிகால் நிதி, ஆரம்ப கல்வி நிதி முதலிய அறிக்கைகளை தட்டச்சு செய்து **6** நகல்கள் பிரதி எடுத்த வகைக்கு உதவி இயக்குநர் அலுவலகம் மதுரையில் தற்காலிக தட்டச்சராக பணிபுரிந்து வரும் திருமதி.எஸ்.பரமேஸ்வரி அவர்களுக்கு ரூ.9800/– காசோலையாக வழங்கவும் மேற்படி செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

செலவினத்தை மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 293 | **பொருள் எண்.13**<br><br>இந்நகராட்சி வார்டு எண்.8, பாலமுருகன் கோவில் பின்புறம் ரூ.6.00இலட்சம் மதிப்பில் மழைநீர் வடிகால் மற்றும் இரண்டு சிறிய பாலங்கள் கட்டும் பணிக்கு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br><br>வ.எண். \| ஒப்பந்தகாரர் பெயர் \| மதிப்பீடு தொகை \| ஒப்பந்த தொகை \| கூடுதல்/குறைவு<br>1. \| திரு.கே.பதுருனிசா \| ரூ.5,02,278 \| ரூ.5,01,981 \| 0.06% குறைவு<br>2. \| திரு.எஸ்.முத்துவேல் \| ரூ.5,02,278 \| ரூ.5,19,210 \| 3.37% கூடுதல்<br><br>மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள திருமதி.கே.பதுருனிசா அவர்களின் விலைப்புள்ளியை அனுமதித்தும், அன்னாருக்கு வேலை உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 294 | **பொருள் எண்.14**<br><br>இந்நகராட்சி அலுவலகத்தில் அமைந்துள்ள ஆணையர் மற்றும பொறியாளர் அறைகளில் குளிர்சாதனப்பெட்டி அமைத்தல், தளவாடச்சாமான்கள் அமைத்தல் மற்றும் அறைகளில் தடுப்பு அமைத்தல் ஆகிய பணிகளுக்கு ரூ.9.00இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டமைக்கு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>வ.எண். \| ஒப்பந்தகாரர் பெயர் \| மதிப்பீடு தொகை \| ஒப்பந்த தொகை \| கூடுதல்/குறைவு<br>1. \| திருமதி.கே.பதுருனிசா \| ரூ.7,38,125 \| ரூ.7,51,309 \| 1.79% கூடுதல்<br>2. \| திரு.எஸ்.முத்துவேல் \| ரூ.7,38,125 \| ரூ.7,38,088 \| 0.01% குறைவு<br><br>மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள திரு.எஸ்.முத்துவேல் அவர்களின் விலைப்புள்ளியை அனுமதிக்கவும், அன்னாருக்கு வேலை உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>295</td><td>

## பொருள் எண்.15

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 01.07.2018 முதல் 30.06.2018 வரை குடிநீர் விநியோகப் பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ள ரூ.9.70இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டமைக்கு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

<table>
<tr><th>வ.எண்.</th><th>ஒப்பந்தகாரர் பெயர்</th><th>மதிப்பீடு தொகை</th><th>ஒப்பந்த தொகை</th><th>கூடுதல்/குறைவு</th></tr>
<tr><td>1.</td><td>திருமதி.பி.அமுதா</td><td>ரூ.8,29,944</td><td>ரூ.8,29,632</td><td>0.03% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு.எஸ்.முத்துவேல்</td><td>ரூ.8,29,944</td><td>ரூ.8,33,400</td><td>0.42% கூடுதல்</td></tr>
</table>

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள திருமதி.பி.அமுதா அவர்களின் விலைப்புள்ளியை அனுமதிக்கவும், அன்னாருக்கு வேலை உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம்.
</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>296</td><td>

## பொருள் எண்.16

இந்நகராட்சிக்குச் சொந்தமான நகராட்சி அலுவலகத்தைச்சுற்றி ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

<table>
<tr><th>வ.எண்.</th><th>ஒப்பந்தகாரர் பெயர்</th><th>மதிப்பீடு தொகை</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை</th><th>கூடுதல்/குறைவு</th></tr>
<tr><td>1.</td><td>திருமதி.கே.பதுருனிசா</td><td>ரூ.8,24,098</td><td>ரூ.8,29,093</td><td>0.61% கூடுதல்</td></tr>
<tr><td>2.</td><td>திரு.எஸ்.முத்துவேல்</td><td>ரூ.8,24,098</td><td>ரூ.8,23,551</td><td>0.07% குறைவு</td></tr>
</table>
</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள திரு.எஸ்.முத்துவேல் அவர்களின் விலைப்புள்ளியை அனுமதிக்கவும், அன்னாருக்கு வேலை உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கலாம். | |
| 297 | **பொருள் எண்.17**<br><br>திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மேலூர் நகராட்சிப் பகுதியில் உள்ள அரசு மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் உள்ள கழிப்பறைகள் பராமரிப்பு மற்றும் பள்ளி வளாகப் பராமரிப்பு பணி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் கடித எண்.32050/2016/ஜே2 நாள்.26.10.2017 ன்படியும், அரசாணை(நிலை)எண்.77 நாள்.13.04.2015ன்படியும், தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ள 28.02.2018 நடைபெறும் மறு மின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் 06.02.2018 அன்று தினமணி நாளிதழில் வெளியிடப்பட்டதற்கான விளம்பரக்கட்டணம் ரூ.16968/— எக்ஸ்பிரஸ் பப்ளிகேஷன்ஸ் ,மதுரை நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2020/2017/எச்1 | அனுமதிக்கப்பட்டது |
| 298 | **பொருள் எண்.18**<br><br>மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், மதுரைஅவர்களின் கடித ந.க.எண்.62174/2015/ஆதி6 நாள். 03.2018 அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி மனிதக்கழிவுகளை மனிதனே அகற்றும் பணியாளர்களுக்கான கணக்கெடுப்பு முகாம் மற்றும் விழிப்புணர்வு முகாம் 13.04.2018, 16.04.2018 ஆகிய இரண்டு தினங்களில் நடைபெறுவது குறித்து விழிப்புணர்வு விளம்பரம் 07.04.2018 அன்று விளம்பரம் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | வெளியிடப்பட்டதற்கான விளம்பரக்கட்டணம் ரூ.28665/– எக்ஸ்பிரஸ் பப்ளிக்கேசன் நிறுவனம், மதுரைக்கு வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>கோப்பு எண்.613/2018/எச்1 | |